
சிறியோர் முதல் பெரியோர் வரை
வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் எச்சரிக்கை
தரும் அரிய நூல்

**ஓவியர் மு. ஷேக்** எழுதிய
**‘காக்க காக்க உயிர் காக்க’**
விலை ரூபாய் **120/-** மட்டும்




தொடர்புக்கு:
**தூரிகை குடில் பதிப்பகம்**
எண்: **3,** கடைசி குறுக்குத் தெரு,
பசும்பொன் நகர் விரிவு
பம்மல், சென்னை - 600075
**கைபேசி: 98411 23247**

# மருத்துவர் க. கோபால் அவர்களின் பவழ விழா!




**அ**ரும்பாவூர் மருத்துவர் க. கோபால் அவர்களின் பவழ விழா மருத்துவ பணியில் ஐம்பதாண்டு நிறைவு, அகவை எழுபத்தைந்து தொடக்கம், தமிழ்ப்பணியில் முப்பத்திரண்டாண்டு நிறைவு என முப்பெரும் விழாவாக 25.8.24 அன்று பெரம்பலூர் ஜே.பி.எஸ். திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு முனைவர் கு. திருமாறன் தலைமை தாங்கினார். மருத்துவர் கோபால் அவர்களின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் விழா மலரை புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்கள் வெளியிட, முதல் படியை மருத்துவர் முனைவர் சு. நரேந்திரன் பெற்றுக்கொண்டார்.

வெண்பாப்பாவலர் சுந்தரம், மருத்துவர் தி.ப.மல்லிகா, குடந்தய் வய்.மு.கும்பலிங்கனார், முனைவர் கடவூர் மணிமாறன் உட்பட 30க்கும் மேற்பட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இவ்விழாவினை ஊர்ப்பெருமக்கள் ஒன்றுகூடி நடத்தினர் என்றால் மிகையாகாது. மருத்துவர் க. கோபால் மீது அவர்களுக்குள்ள நன்மதிப்பு விழாவைச் சிறப்பாக்கியது. விழாவில் தூய்மைப் பணியாளர்கள் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றது குறிப்பிடத் தக்கது.

முன்னதாக முனைவர் திருக்குறள் நாவை.சிவம் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினார். முனைவர் ம. செல்வபாண்டியன் வரவேற்புரை யாற்றினார். மருத்துவர் கோ.ரேவதி நன்றியுரையாற்றினார். புலவர் ப. இராமதாசு, திரு. இ.தாகீர்பாட்சா நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினர். இந்தப் பவழ விழாவையொட்டி முகம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கப் பெற்றது.




**க**லைஞர் கருணாநிதி நகர் இலக்கிய வட்டத்தின் 490ஆவது கூட்டம் கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டு விழாவாக நடைபெற்றது. கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் மூத்த வழக்கறிஞர் சிகரம் ச. செந்தில்நாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நூற்றாண்டு விழாக்குழு செயலாளர் கவிஞர் இரா.தே.முத்து சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஜனகரன், புலவர் ஆ. செகதீசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னதாக கவிஞர் ந. ஜெகதீசன், இசைமணி சித்ராமணி ஆகியோர் மொழி வாழ்த்து பாடினர். முகம் இதழாசிரியர் முனைவர் இளமாறன் வரவேற்புரையாற்றினார். இலக்கியவட்டச் செயலாளர் பேரா. முனைவர் பெ.கி.பிரபாகரன் நன்றியுரையாற்றினார்.

**முகம் இதழுக்குத் தொகை அனுப்ப:**

MUGAM
Current Account No. 54002838494
IFS Code: SBIN0007625, State Bank of India,
K.K. Nagar Branch, Chennai - 600 078.

வங்கியில் பணம் செலுத்துவோர்
அஞ்சலட்டை அல்லது புலனத்தில் விவரம் தெரிவிக்கவும்
பேசி: 94442 64111

# பண்ணைத் தமிழ்ச்சங்கம் எடுத்த முப்பெரும் விழா!



**ப**ண்ணைத் தமிழ்ச் சங்கத்தின் 41ஆவது ஆண்டுத் தொடக்க விழா, தமிழ்ச் சான்றோர்களுக்கு விருது வழங்குவிழா, கவிதைத் திருவிழா என முப்பெரும் விழா 31.08.2024 அன்று சென்னையில் நடைபெற்றது. விழாவிற்குப் பண்ணைத் தமிழ்ச்சங்க அமைப்பாளர் கவிக்கோ துரை.வசந்தராசன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாட்டு அரசின் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று விழாப் பேருரையாற்றினார். முனைவர் த.கு.திவாகரன் மற்றும் பல்வேறு இலக்கிய அமைப்புகளைச் சார்ந்த நண்பர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் 30க்கும் மேற்பட்டோருக்குச் சான்றோர் விருது, கவிச்செல்வர் விருது, உரைச்செல்வர் விருதுகள் வழங்கப் பெற்றன. தமிழ்ச் சான்றோர்களை முறையாகப் பூங்கொத்து கொடுத்து வரவேற்றது விழாவின் சிறப்பாகும். கவிதைப் போட்டியில் பங்கேற்று வென்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பெற்றன.

கவிச்சிம்மன் தேனீ. தமிழ்ச்சிம்மன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். பாவலர் ஞால. இரவிச்சந்திரன் தொகுப்புரை வழங்கினார். விழாவின் இறுதியில் பேராசிரியர் ச. சக்திவேல் நன்றியுரை யாற்றினார். விருந்தோம்பலுடன் விழா இனிதே நிறைவேறியது.

# மேனியெங்கும் மெருகுடையாள்!

முல்லைமலர் புன்னகையால் கொள்ளையின்ப உருவுடையாள்
எல்லையில்லா நிறமுடையாள் மேனியெங்கும் மெருகுடையாள்
மேலாடை காற்றினிலே மெல்லமெல்ல தவழ்ந்துவிழ
அவள்வருகை நறுமணந்தான் முன்னேறி பறைசாற்றும்!

கார்முகிலின் குளிர்நிலையைத் தன்னகத்தே கொண்டிருந்தாள்
இடையழகில் நடையழகில் அவளழகில் சலிப்பிள்ளை
கண்விழியில் மொழியசைவில் காலமெல்லாம் அவள்நினைவில்
அவளின்றி நானில்லை நானிங்கே தானில்லை!

சிறைவைத்த என்னிதயம் பார்வையிலே தான்திறந்தாள்
இன்பத்தின் எல்லையிலே அன்புச்சிறை தான்பிடித்தாள்
விழியதனில் வாய்மொழியில் கேட்டிடவே சலிப்பிள்ளை
நினைவில்லை நிலையில்லை அவளைவிட நானில்லை!

பருவவயது அவள்முகத்தை நோக்கையிலே நோக்கமதைப்
போக்கிடவே வழியின்றிப் பருவத்தால் காத்திருந்தேன்!
என்மனத்தில் உணர்வுகளை எளிதினிலே உணர்ந்தவளாய்
சொல்லத்தான் நினைத்திருந்தேன் சொல்லிவிட்டேன் எண்ணமதை!

மோகத்தால் அவள்முகமும் நாணத்தால் குழைந்திருக்கும்
எனைக்கண்டு செவ்விதழும் சின்னதாக சிணுங்கிவிடும்
எண்ணத்தில் எழுந்துவிழும் வண்ணமிகு வரிகளினை
சின்னசின்ன சொற்களாலே கவிமாலை தொடுத்திடுவேன்!

என்கவிதை படித்தவுடன் எண்ணத்தில் மாற்றமுண்டு
எத்தனையோ கதைசொல்லும் உங்கள்மனம் அலைபாயும்
இல்லையில்லை எதுவுமில்லை கவிஞனன்றோ யானும்தான்
மெல்லத்தான் சொல்லிவிட்டேன் மேன்மைமிகு கற்பனையை!



- **சுந்தர பழனியப்பன்,** பண்ணுருட்டி
877836879

# சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்



சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்ற சுவாமிகள் மற்றும் இசைப்பேரறிஞர் டி.ஏ. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார் பிறந்தநாள் விழாவில் அவருடைய மூத்த மாணவரும், சிறந்த தமிழிசைப் பாடகருமான இசைப்பேரறிஞர் கலைமாமணி முனைவர் டி.கே.எஸ், இளங்கோவன் தம் ஆசிரியரைப் பற்றி எழுதி வானதி பதிப்பகம் தயாரித்த 'அசைக்கொணா இசைத்தமிழ் அறிஞர்' என்னும் நூலினை டாக்டர் சுதா சேஷையன் அவர்கள் வெளியிட்டார். தொழிலதிபர் நல்லி குப்புசாமி, வி.ஜி.சந்தோசம், தமிழ்நாடு இயல்இசை நாடகமன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராஜ், வானதி இராமநாதன், நூலாசிரியர் டி.கே.எஸ். கலைவாணன், இசைப் பேராசிரியரின் மகன் டி.ஏ.எஸ்.தக்கேசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---



அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், அகவை மூத்த எழுத்தாளர் **முனைவர் மலையமான்** அவர்களுக்கு 21.8.24 அன்று பாராட்டுவிழா நடத்திச் சிறப்பித்தது. தேசியத் தலைவர் முனைவர் கோ. பெரியண்ணன், பொதுச்செயலாளர் இதயகீதம் இராமானுசம், டி.கே.எஸ். கலைவாணன், வாசுகி கண்ணப்பன் இரு பேராசிரியர்கள் பாராட்டிச் சிறப்பித்தனர்.



# இளமாறன் கவிதைகள் ஒரு பார்வை!



- திருமதி சாந்தா பாலகிருஷ்ணன்
94421 82430

**வ**ழிபாடு என்பது பக்தனுக்கும், அவன் விரும்பித் தொழுகின்ற தெய்வத்திற்கும் இடையே உள்ள அந்தரங்க ஒப்பந்தம். இது மௌனத்தை மொழியாக உடைய தியானமாயிருக்கலாம் அல்லது அவன் பாரம்பரிய கலாச்சாரத்தின் வெளிப்பாடாகி அவன் இதயத்துடன் இணைந்து உறவாடும் தாய்மொழியாக இருக்கலாம்.

– முனைவர் தமிழ்க்குடிமகன்

**தெய்வத்தமிழ்:**

கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ், ஏனை
மண்ணிடைச் சிலஇலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ?

– **திருவிளையாடற் புராணம்,** பரஞ்சோதி முனிவர்

முதலாம் தமிழ்ச் சங்கத்தில் சிவபெருமான் கலந்து கொண்டு தமிழ்ப் புலவர்களுடன் அமர்ந்து தமிழ் ஆய்ந்தார் என்று பரஞ்சோதி கூற்றினால் தமிழ்மொழி தெய்வத்துடன் தொடர்புடைய தெய்வமொழி என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தின் ஆரண்ய காண்டத்தில் இராமன் அகத்தியன் சந்திப்பு பற்றி விவரிக்கும்போது,

......... ....... ....... ......
மாண்டவர தன்சரண் வணங்க எதிர்ந்தான்
நீண்டதமி ழால்உலகை நேமியின் அளந்தான்

– **அகத்தியர்,** படலம் **2666**

என்று குறிப்பிடுகிறார். நேமி - திருமால், அவன்தன் திருவடியால் நீண்ட உலகை அளந்ததுபோல் தமிழால் அகத்தியர் இவ்வுலகை அளந்தார் என்கின்றார்.

'அளந்தமை' என்பது அறிவுச் செல்வங்களை எல்லாம் அம்மொழியில் உண்டாக்கியது. மக்கள் அறிவன யாவற்றையும் தமிழ் கொண்டே அறியுமாறு வளமுறச் செய்வது. இதில் இறையருள் பெறுவதற்கான வழிபாடும் அடங்கும் என்று கம்பர் தமிழ்மொழியின் தெய்வத்தன்மை பற்றிக் குறிப்பிடுகிறார்.

சேக்கிழார் அவர்கள் தாம் இயற்றிய பெரிய புராணத்தில்,

........ ........ மலயந்தர வந்தமந்த
மெய்வைத்த காலும் தரும்ஞாலம் அளந்தமேன்மை
தெய்வத் தமிழும் தரும்செவ்வி மணஞ்செயீரம்

– **சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் - 975**

என்ற பாடல் வாயிலாக, 'மலையிலிருந்து வந்த தென்றல் காற்று, வாசனையையும் உலகத்தையே தமிழால் அளந்த அகத்தியர் வளர்த்த தெய்வத் தமிழ் வாசனையையும் கொண்டுவந்து மதுரையில் சேர்க்கும்' என்கின்றார்.

குமரகுருபர சுவாமிகள் தாம் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்னும் நூலில் -

பணிகொண்ட முடவு படப்பாய் சுருட்டு
பணைந்தோள் எருத்தலைப்ப
பழமறைகள் முறையிடப் பைந்தமிழ் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டேலே...

என்று குறிப்பிடுவதிலிருந்து, பெருமாள் ஆழ்வாரைப் பின் தொடரவில்லை. ஆழ்வாரின் பாசுரங்களையே பின்தொடர்ந்தார் என்பதாகக் குறிப்பிடு கின்றார்.

கணிக்கண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீயிங்கி ராதே - துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்; நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்ச்சுருட்டிக் கொள்!

– **திருமிழிசை ஆழ்வார்,** தனிப்பாடல் திரட்டு

காஞ்சிபுரத்தில் கணிக்கண்ணன் என்னும் புலவன் மன்னனின் ஆணைப்படி ஊரைவிட்டுப் போகின்றான். 'அவனே போகும்போது உனக்கு மட்டும் இங்கு என்ன வேலை, நீயும் உன் பைந்நாகப் பாய்ச் சுருட்டிக் கொண்டு கொள்' என்று இறைவனையே தமிழின் பின் செல்லப் பணித்த பெருமை தமிழுக்கு உண்டு. இதிலிருந்து தமிழும் தெய்வமும் ஒன்றோ டொன்று கலந்தது என்று தெரியவருகிறது.

## தாய்மொழி வழிபாடு:

கவிஞர் இளமாறனின் சிந்தனையில் ஓடும் எண்ணச் சரங்களாவன, 'உலகமெங்கும் வாழும் பல சமயத்தார்களும் அவரவர் தாய் மொழியிலேயே இறைவழிபாடுகளை நிகழ்த்தி வருவதைக் கண்கூடாகக் கண்டும், சிலர் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டே, தமிழுக்குப் புறம்பாகப் பேசவும், சிந்திக்கவும் முடிகிறதென்றால் முதலில் இவர்களைக் கவனிக்க வேண்டும்' என்று நினைக்கிறார். தமிழர்கள் பலவீனமான வர்களா அல்லது பலவீனப்படுத்தப்பட்டுவிட்டார்களா என்று மறுமுனையில் நின்று கவிஞர் சிந்திக்கிறார்.

சமஸ்கிருதம்தான் தேவமொழி, சமஸ்கிருதத்தில்தான் இறை வழிபாடு செய்ய வேண்டும் என்று கூறும் அறிவுஜீவிகள், 'தமிழர்கள்' என்ற முகமூடி அணிந்துகொண்டு, பசுந்தோல் போர்த்திய புலிகளாக தமிழ்நாட்டில் எந்தவித அச்சமும் இல்லாமல் உலா வருகிறார்கள். உள்ளத்தில் சமஸ்கிருதத்தை வைத்துக்கொண்டு உதட்டளவில் ஊருக்காக, 'நானும் தமிழன்தான், தமிழ் எனது தாய்மொழி' என்று பசப்பும் இவர்களை அடையாளம் கண்டுகொண்டு வள்ளலார் வாக்குப்படி 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்று கருதி அவர்களை நம் பாதையிலிருந்து விலக்க நினைக்கிறார்.

தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டு, தமிழர்களின் பணத்தால் தங்களை வளர்த்துக்கொண்டு, தமிழ்நாட்டில் தமிழால் பிழைப்பு நடத்திக் கொண்டு இருப்பவர்கள், தமிழில் பல கட்டுரைகள், கவிதைகள், நூல்கள் என எழுதிக் குவித்துப் பணம் சம்பாதித்துக் கொண்டு, தன்னைத் தமிழறிஞராகப் பிரபலப்படுத்திக் கொண்டு, பொதுவெளியில் கெத்தாக நின்று 'சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்ய வேண்டும், அதுதான் தேவமொழி, தமிழ்மொழி இறைவனுக்குத் தீட்டு மொழி' என்று பரப்புரை செய்பவர்களைப் பார்த்து, முதலில் உன் பூர்வீகம் எது? உன் வரலாறு என்ன? சமஸ்கிருதம் தேவமொழி என்றால், உன் தாய்மொழி எது? இந்திரனை முதன்மையாக வைத்துத் 'தீ' வளர்த்து உயிர்ப்பலி கொடுத்து

யாகம் செய்து கொண்டு பொழுது போக்கும் உன்னுடைய கடவுள் யார்? உன்னுடைய அடையாளத்தைக் காட்டு என்கிறார் கவிஞர்.

இரண்டாயிரம் ஆண்டுகளாய் எம்மண்ணில் குடியேறி, ஒட்டுண்ணிபோல் என் இன உழைப்பில் உன்னை வளர்த்துக் கொண்டு, எனக்கெதிராகக் குரல் உயர்த்தும் நீ என் உணர்வோடு விளையாடுகிறாய். உனக்கும் எனக்கும் உள்ள இனத்தொடர்பு யாது? என்று கீர்த்தனை என்னும் பச்சை மிளாரால் மேல்தோல் உரியும்படி அவர்கள் நினைப்பை விளாசுகிறார்.

அபேதானந்த் என்பவர் சமஸ்கிருதம் பாரதத்தின் தொன்மையான மொழி, உண்மையில் சமஸ்கிருதம் தீட்டுப்படாத சுத்தமான தேவமொழி என்று 'வெள்ளைக் காக்கா மல்லாக்கப் பறக்குது' என்பதுபோல் பிதற்றுகிறார். ஆனால் பல்லவர் காலத்தில்தான் தமிழ்நாட்டில் சமஸ்கிருத வழிபாடு நுழைந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டுவரை கோயில்களில் தமிழில் வழிபாடே இருந்தது. அதன் பிறகுதான் தற்போதுள்ள மாற்றங்கள் எல்லாம் என்று சிறந்த சைவ அறிஞராகிய வை.இரத்தினசபாபதி குறிப்பிடுகின்றார்.

இதையெல்லாம் மனத்தில் இருத்தி அவர்களைப் பார்த்துக் கவிஞர் கேட்கிறார், 'உன்னையும் என்னையும் இந்த மண்ணையும் விண்ணையும் படைத்த இறைவனுக்கு உன்மொழி தீட்டுப்படாத மொழி, எம்மொழி இறைவனுக்குத் தீட்டா? இவ்வாறு கூறி அடையாளம் இல்லாத நீ எங்கள் அடையாளத்திற்கு வைக்கும் வேட்டா? முதலில் உன்னை யார் என்று தெளிவாக அடையாளத்தை எனக்குக் காட்டு என்று இறைவழிபாடு பற்றிய உரிமைப் பிரச்சினை என்பதால் கவிஞர் அவர்கள் கீர்த்தனை வடிவிலேயே அவர்களுக்குப் பதிலடி கொடுத்திருப்பது சிறப்பு.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பதை எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்று தூய தமிழில் மொழிமாற்றி, அதற்கு இராகம் மற்றும் தாளத்தின் பெயர்களைக் கொடுத்திருப்பது கவிஞரின் இசைஞானம் ஆகும். அதில் உள்ள தொடுப்பு என்பதில் உள்ள வரிகள் தன்நிலையிலிருந்து உயர்ந்து, தொகையறா போன்று முடிப்புக்கு இடையே இடையே வந்து அழகுக்கு அழகு சேர்த்து வசைப்பாட்டாக அருமையாக அமைந்துள்ளது. கீர்த்தனையைப் பார்ப்போம்:

இராகம்: மணிரங்கு                <u>எடுப்பு</u>                தாளம்: ஆதி

யாரென்று தெளிவாக அடையாளம் காட்டு
இறைவனுக்குத் தமிழ் மொழியா தீட்டு - இது

யாருக்கு நீவைக்கும் வேட்டு - என்
உணர்வோடா உன்விளை யாட்டு?

யாரென்று....

<u>தொடுப்பு</u>

என்மொழி பேசி என்னுடன் வாழ்ந்து
என்இன உழைப்பில் வளர்ந்திடும் உன்னை

யாரென்று....

<u>முடிப்பு</u>

வேரூன்ற என்மண்ணும் என்மொழியும் வேண்டும்
வழிபாட்டில் இனவெறியில் வடமொழியா வேண்டும்?
ஈராயிரம் ஆண்டாய் என்சோறு தான்உண்டாய்
இருந்தாலும் எப்போதும் எனக்கெதிராய்த் தான்நின்றாய்!

இறைவனுக்குத்....

**- பதிவுகள்,** அடையாளம் காட்டு

என்று யாராலும் வெல்ல முடியாத அரக்க உருவம் கொண்ட கோலியாத்தை (பைபிள்) தாவீது என்ற சிறுவன் ஒரே ஒரு கவண்கல்லால் அவன் நெற்றியில் அடித்து அவனை வீழ்த்தியதுபோல், கவிஞர் அவர்கள் இந்த ஒரு கீர்த்தனையாலேயே வந்தேறிகளின் அகங்காரத்தை வீழ்த்தி விட்டார்.

- தொடரும்

# நினைவேந்தல்!



**மு**கம் புரவலர் திருவொற்றியூர் வெ.பொன்னுரங்கம் அவர்களின் தாயார் திருமதி குப்பம்மாள் அவர்களின் 43ஆம் ஆண்டு நினைவு நாள் 25.10.2024. முகம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கித் தாயாரின் நினைவுநாளைப் போற்றுகிறார் அவர்தம் மகன் 92 அகவை நிறைந்த திரு. வெ.பொன்னுரங்கம்.

இவரைப் போன்று பலரும் பயனுள்ள வகையில் நினைவு நாளைப் போற்றலாம். குடும்ப உறுப்பினர்களின் நினைவைப் போற்ற அடுத்தவருக்கு உதவி செய்வதைக் கொள்கையாகக் கொள்ளலாம் இவரைப்போல. திருமதி குப்பம்மாள் அவர்களின் நினைவை முகம் இதழும் போற்றுகிறது.

# பாவேந்தர் படைப்புகளில் உலகப் பார்வை!



**பு**ரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் பெருமையை அனைவரும் அறியும் வகையில் பாவேந்தர் படைப்புகளில் உலகப் பார்வை என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பு நூல் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. பாவேந்தரின் கவிதை களிலிருந்தும், பிற படைப்புகளிலிருந்தும் இந்தத் தலைப்பை யொட்டிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவின் தாயகம் வானொலி, சென்னை பாவேந்தர் பாசறை, பம்மல் கண்ணதாசன் கலைக்கூடம், பண்ணைத் தமிழ்ச் சங்கம், நான் ஓர் ஐ.ஏ.எஸ்.அகாதெமி ஆகிய அமைப்புகள் இப்பணியை முன்னெடுக்கின்றன. படைப்பாளர்கள் தங்கள் கட்டுரைகளை நான்கு பக்கங்களுக்கு மிகாமல் (ஏ-4 அளவில்) எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு 10.12.2024க்குள் அனுப்பி வைக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழ்வோர் மட்டும் கீழ்க்காணும் மின்னஞ்சலில் கட்டுரைகளை அனுப்பலாம். இந்தியாவுக்குள் இருப்போர் அஞ்சலில் மட்டுமே அனுப்ப வேண்டும்.

**படைப்புகள் வந்து சேர வேண்டிய முகவரி:**
**முனைவர் இளமாறன், பாவேந்தர் பாசறை,**
26, பாரதிதாசன் தெரு, திருநகர்,
சாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.
94442 64111

மின்னஞ்சல்: **mugam.idhazh@gmail.com**

# மீண்டும் பழைய முகவரியில்!

ஏற்கெனவே குடியிருந்த வீட்டிற்கு வந்துவிட்டோம். இனித் தொடர்பு கொள்ள:

**முனைவர் இளமாறன் / முகம் / பாவேந்தர் பாசறை,**
26, பாரதிதாசன் தெரு, திருநகர்,
சாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# தமிழ்நாட்டு மன்னன் கிரேக்க நாட்டை ஆட்சி செய்தான்!



முனைவர் மலையமான்
044 – 24996611

**ஊ**சல் என்பது பெண் களின் விளையாட்டுகளில் ஒன்று. இந்தச் சொல் இன்று ஊஞ்சல் என்று வழக்கில் உள்ளது. ஊசல் ஆடும்போது பாட்டு பாடப்படும். இது ஊசல்வரி எனப்படும். சிலப்பதிகாரத் தில் ஊசல்வரி உள்ளது. அந்தப் பாடல் இது:

**வன்சொல் யவனர்வள நாடு**
**வன்பெருங்கல்**
**தென்குமரி ஆண்ட செருவில்**
**கயல்புலியான்**
**மன்பதை காக்கும் கோமான்**
**மன்னன் திறம்பாடி**
**மின்செய் இடைநுடங்க ஆடாமோ**
**ஊசல்**
**விறல்வில் பொறிபாடி ஆடாமோ**
**ஊசல்**

– சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை

இந்தப் பாடலில் இளங்கோ அடிகள் முக்கியமான - புதுமை யான - வரலாற்றுச் செய்தி ஒன்றை அறிவித்திருக்கிறார். கிரேக்கர் கடுமையான சொல்லாளர்கள்; அவர்களின் வாழிடம் வளமான நாடு; அந்த நாட்டையும் இமய மலையையும் தென்குமரிப் பாண்டிய நாட்டையும் சேரன் ஆட்சி புரிந்தான் என்று அடிகளார் பாடியுள்ளார். தமிழ் மன்னன் கிரேக்க நாட்டை ஆண்டான் என்ற செய்தியை அவரே மீண்டும் கூறியுள்ளார்.

**வன்சொல் யவனர் வளநாடு ஆண்டு**

- சிலம்பு 28:141)

சங்க இலக்கிய நூலான பதிற்றுப் பத்தும் இக்கருத்தை உரைக்கிறது.

**நயனில் வன்சொல் யவனர் பிணித்து**

– பதிற்று. இரண்டாம் பத்து

'அன்பு இல்லாத வன்மை யான சொற்களைப் பேசுகிற யவனரைக் கட்டுப் படுத்தி' (வென்று) என்பது இதன் பொருள்.

எரோடோடஸ் (Herodotus) என்ற கிரேக்கர் உலகின் முதல் வரலாற்றாசிரியர் என்ற புகழுக்கு உரியவர். அவர் 'வரலாறுகள்' என்ற நூலை எழுதினார். பாண்டியன் (Pandion) என்ற தலைவன் தெர்ம்மிலை (Termmilai) என்னும் இனத்தவரின் ஒரு குழுவினரை அழைத்துக் கொண்டு வந்து ஏதென்சில் குடியேறினான் என்று அவர்

குறிப்பிடுகின்றார். பெலாஸ் கியன் இனத்தவர் மொழியி லிருந்து, நெடுங்காலத்துக்கு முன்பே பல சொற்கள் கிரேக்க மொழியில் ஏறின. அவை திராவிட மூலம் கொண்டவை என்றார். (எ-டு: பலை (பழைய), நிரோ (நீர்), பெரி (பெரிய), திளனஸ் (திறன்), பகோஸ் (பங்கு), கேல் (பால்). இவை தமிழின் திரிபு சொற்கள்.

பெலாஸ்கியன் இனத்தவர் திராவிடத் தொடர்பினர் என்றும் கிராண்டு (F. Grand) அறிவித்தார். கிரேக்கத்தில் திராவிடர் (தமிழர்) வாழ்ந்தனர் என்ற கோட்பாட்டைக் கிராண்டு மறைமுகமாகக் கூறினார்.

லிஷா, லிடியா, நாட்டினர் பெலாஸ்கியன் இனத்தவர். - இவர்கள் திராவிட (தமிழ்) தொடர்பினர் என்றார். சலெக் (Sealek), லிஷா நாட்டு மக்கள் தங்களைத் தெர்ம்மிலை (Termmilai) என்றனர். (தமிழர் என்ற சொல்லின் திரிபாக இருக் கலாம்)

கிரேக்கத்தில் ஐரோப்பியர் குடியேறுவதற்கு முன் பழந்தமிழர் அங்கு வாழ்ந்தனர் என்பதை உறுதியாக உணர முடிகிறது. ஆகவே, கிரேக்கத்தைத் தமிழர் ஆண்டனர் என்ற கருத்து உண்மையாக இருக்கலாம். இதுபற்றி ஆழமான ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும்.

## *பகுத்தறிந்து பாடியவன்!*

**எழுகிற அலையாய்
எரிகிற மலையாய்
எம்மொழி மாற்றியவன்!**

**அழுதிடும் மகவை
ஆற்றிடும் தாய்போல்
அன்புண வூட்டியவன்!**

**பழுதிலா துழைக்கும்
பண்புடை மாந்தரைப்
படைப்பினில் ஏற்றியவன்!**

**தொழுதுயிர் வாழ்வோர்
துயர்நிலை கண்டு
கத்தியைத் தீட்டியவன்!**

**செழுமைகொள் பெண்மை
குடும்ப விளக்கெனச்
செம்மையாய்ப் பாடியவன்!**

**உழுகுடி மக்களின்
வாழ்வியல் அறத்தை
உவமைகள் ஆக்கியவன்!**

**அழுக்குடை ஆரிய
சூழ்ச்சியை வென்றிட
அறிவுரை கூட்டியவன்!**

**வழுவுடை வடவர்தம்
வாழ்வியல் துறவை
வேம்பெனத் தூற்றியவன்!**

**விழுகிற மக்கள்
உயர்கிற வழியை
உயிர்வரைத் தேடியவன்!**

**- தமிழ் இயலன்**
98416 19087

# அயலக மண்ணில் தனித்தமிழ்!

- மறை.திரு.தாயுமானவன்
98409 88361



அயலக மண்ணில் தனித் தமிழுக்கு வித்திட்டு வளர்த்த சான்றோர்களால் இன்றளவும் தமிழ்மொழி அங்குச் சிறப்புடன் வாழ்கிறது; வாழுந்தும், வளர்ந்தும் கொண்டிருக்கிறது.

மலேசியாவில் தனித் தமிழுக்கு உரமூட்டிய சான்றோர் பெருமக்கள் பலர். தமிழ் உணர் வாளர்களால் இன்றளவும் தமிழ் மொழி உயிர்ப்புடன் விளங்கு வதை நான் நேரில் கண்டு பெருமிதம் அடைந்தேன். இதன் வெளிப்பாடாக, யான் எழுதிய 'தனித்தமிழ்த் தந்தைவரலாற்றுச் சுவடுகள்' என்னும் நூல் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

தமிழ்நாட்டில் தமிழ் இருக்கிறது. மலேசியா, சிங்கையில் தமிழ்மொழி வாழ்கிறது. ஆம், மலையக மக்கள் தமிழ்மொழி பேசுகிற பொழுது அயல் மொழிச் சொற்களைத் தவிர்த்துதான் பேசு கின்றனர். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழகத்தில் வறுமையில் உழன்ற பல்லாயிரக் கணக்கான சிற்றூர் மக்களை ஆசைவார்த்தை களைக் கூறி கப்பல் மூலம் மலேசியா மலைக்காடுகளில் தோட்டத் தொழிலாளிகளாக வேலை செய்வதற்கு ஆங்கிலேய அரசால் அழைத்துச் செல்லப் பட்டனர். மிகக் கடுமையான பணிகளுக்கிடையில் பலர் மாண்டனர். சிலர் மீண்டனர். முதல் தலைமுறையினர், இரண்டாம் தலைமுறையினர் மலையகத்தில் அந்நாட்டுக் குடியுரிமை பெற்று ஓரளவு வசதியாக வாழ்க்கை முறையைக் கைக்கொண்டனர். அக்கால அளவில் தமது குழந்தைகள் தாய் மொழியைப் படிக்கும் வண்ணம் பல தோட்டத் தமிழ்ப் பள்ளிகள் உருவாக்கப் பட்டன. அங்குக் குடியேறிய தமிழர்கள் (இந்தியர்), சீனர்கள் ஆகியோர் மலையக நாட்டின் பொருளாதார முன்னேற்றத் திற்கு அரும்பாடுபட்டனர் என வரலாற்றின் வழி அறிய முடிகிறது.

அங்கு வாழும் தமிழ் மக்களின் குழந்தைகளுக்காக உருவாக்கப் பட்டதுதான் மலையத்

தோட்டத் தமிழ்ப் பள்ளிகள். ஒன்று முதல் ஆறாம் படிவம் வரைதான் அங்குத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. மலையகத்திலுள்ள தமிழ், சீனப் பள்ளிகளில் மலாய் மொழி கண்டிப்பாக படிக்க வேண்டும் என்பது மலேசிய அரசின் ஆணை என்பது குறிப்பிடத் தக்கது. அங்ஙனம் பயின்றவர்கள்தான் இன்று அன்னைத் தமிழைப் பிற மொழிக் கலப்பின்றி, குறிப்பாக ஆங்கிலக் கலப்பின்றி உரையாடு கிறார்கள். தமிழ், மலாய், ஆங்கிலம் என மும்மொழி படித்தாலும் தமிழ் பேசுகின்றபோது பிறமொழிச் சொற் களைக் கலவாமல் பேசுகின்றனர் என்பது தனிச் சிறப்பாகும். இதனால்தான் தனித்தமிழுக்கு அங்கு சிறப்பான வரவேற்பு உள்ளது என்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், அண்ணல்தங்கோ, திருக்குறள் மணி இறைக்குருவனார் போன்ற தமிழறிஞர்களைப் பெரிதும் போற்றுகின்றனர்.

இதன் பொருட்டே நான் எழுதிய 'தனித்தமிழ்த் தந்தையின் வரலாற்றுச் சுவடுகள்' நூல் பத்து இடங்களுக்கும் மேலாக வெளியீடு களும், நூல் அறிமுகமும் பெற்றன. அமைப்புகளாலும் தனித்தமிழ் ஆர்வலர்களாலும், தனித்தமிழ் உணர்வாளர்களாலும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டது நிறை வாக இருந்தது.

தனித்தமிழ் இயக்கத்திற்கு இன்றளவும் தொடர்ந்து தொண்டாற்றிக் கொண்டிருக்கம் திருவாளர்கள் தியாகராசன், முனைவர் ஔவை முருகன், முரசு நெடுமாறன், முனைவர் சி.வடி வேலு, முனைவர் இரவிச்சந்திரன், முனைவர் அருள் ஆறுமுகம், கண்ணன், கரு.பன்னீர்செல்வம், சுப.கதிரவன், கணேசன், குணசேகரன், சிந்தனைச் செம்மல் மாரியப்பன், விசுவநாதன், இரா. திருச்செல்வம், இரா. திருமா வளவன், சுப.சற்குணன், இராசஇராசன், அறிவன், கவிஞர் ஆசைத்தம்பி, ஆ.கி.டேவிட், தமிழ்மணி எல்லோன், முனைவர் மல்லிகா, பெரிய நாயகம், இரெ.சு. அறிவன் தைபிங், முத்தையா, முனைவர் அரசேந்திரன், மகேசுவரி சுப்பிரமணியம் போன்ற தமிழ்மொழி, இன உணர்வாளர் களால் மலேசிய மண்ணில் இன்றளவும் தனித்தமிழ் இயக்கம் நன்கு வேறூன்றியுள்ளது.

திரு.அரசேந்திரனும் அவர்தம் துணைவியாரும் எனது செலவு (பயணம்) எவ்விதத் தடங்கலுமின்றிச் சிறப்பாகச் செய்த தால், தனித்தமிழ் இயக்கத்தின் கொள்கைகளை அயலக மண்ணில் எடுத்து இயம்ப முடிந்தது. அயலக மண்ணில் வாழும் தமிழ்ச் சான்றோர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையதாகும்.

# பேரறிவாலயமாக ஒரு நூலகம்!



'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்கிறது திருக்குறள். அதை நடைமுறைப்படுத்துகிறது வல்லரசு அமெரிக்கா. அறிவுத் தேடலுக்காக வருவோருக்கு அது சொர்க்க பூமி. நிலக்கரி, இரும்பு, தங்கச் சுரங்கங்களைவிட மண்ணின் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது அறிவுச் சுரங்கங் களான நூலகங்களே என்பதைச் சரியாக உணர்ந்து நாடெங்கும் பொது நூலகங்களை அறிவின் கோவிலாக அமெரிக்கா அமைத் திருக்கிறது.

அங்கு நாடெங்கும் உள்ள 1,31,848 நூலகங்களில் 17,278 நூலகங்கள் பொது நூலகங்கள் ஆகும். மக்கள் யாராயினும் இங்கு வந்து அறிவுப் பசிக்கு விருந் துண்ண அழைக்கிறது அரசு.

ஒரு பொது நூலகம் எப்படி இருக்கும்? என்று அறியும் ஆவலுடன் நான் தங்கியிருக்கும் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள பிரிஸ்கோ பகுதி பொது நூலகத் திற்குள் நுழைந்தேன். உத்தரத்தில் தொங்கும் எழுத்துகளால் அமைந்த பொன்மொழி வாசகங்கள் வித்தி யாசமாக வரவேற்றன. நூலகமா? அல்லது 5 நட்சத்திர விடுதியா? என்று மலைத்தேன். நுழைந்த வுடன் டினோசர் எலும்புக் கூட்டின் பேருருவம் வியப்பில் ஆழ்த்தியது. காலை மெத்தென்று அழுத்தும் தரை விரிப்பும் மென்மையான ஒளியும் இதமான குளிரும் மனத்தை அமைதிப்படுத்தின. 'காணக் கண்கோடி வேண்டும்' என்று பாடத் தோன்றியது. பல்வேறு வகையான அடுக்குகளில் கைக் கெட்டும்படிப் பலதுறை நூல்கள் விதவிதமான நாற்காலிகள், பல வடிவங்களில் மேசைகள், எப்படி வேண்டுமானாலும் சலிப்புத் தட்டாமல் படிக்கப் பல்வேறு சூழல் அமைப்புகள். இருவர் மட்டுமே உட்கார்ந்து படிக்க, நால்வர் உட்கார்ந்து படிக்க, பலர் சேர்ந்து படிக்க என்று பலவகைகள். பல வண்ண இருக்கைகள் நெரிச லின்றிக் காணப்பட்டன. சாய்ந்த நிலையில் மட்டுமல்ல, படுத்த நிலையில் படிக்கக்கூட வசதி செய்திருந்தனர்.

நூலகத்தின் ஒருபுறம் உள் ஒதுக்கீடாகக் 'குழந்தைகள் பகுதி' அமைந்திருந்தது. அஃது ஒரு குட்டி குழந்தைகள் நகரம். இரயில் வண்டி உருவை எந்தக் குழந்தையையும் உடனே ஈர்க்கும் வண்ணம் நிறுத்தியிருந்தனர். அதற்குள்



உட்கார்ந்து படிக்கலாம். விளை யாடிக் கொண்டே படிக்கலாம். கணினியில் விருப்பப்படிக் கலக் கலாம். பெரிய பொம்மை விலங்கு கள் பலவற்றுடன் தோழமை கொள்ளலாம். கட்டங்களில் விளையாடலாம். கட்டைகளை அடுக்கிக் கட்டடம் கட்டிக் கற்பனை வளர்க்கலாம். குழந்தைகளுக் கான புத்தகங்கள், கணினிகள் இவற்றுடன் இன்னும் எண்ணற்ற அறிவார்ந்த பொழுதுபோக்குகள்! குழந்தைகள் இங்கு நுழைந்தால் அவர்களை அங்கிருந்து வீட்டுக்கு மீட்டுச் செல்வது படாத பாடாகி விடும். மீண்டும் நாம் குழந்தை யாக மாறக் கூடாதா என்று ஏங்கத் துடிக்கும் சூழல்.

மாடியில் அமைந்துள்ள நூலகத்தின் மற்றொரு பகுதிக்குச் செல்லும் படிக்கட்டுகள் மிக மிக அகலமானவை. ஒரே நேரத்தில் 10 பேர் அருகருகே நகர்ந்தும் படிக்கட்டுகளில் ஏறலாம். மாடியில் முற்றிலும் எந்த ஓசையும் கேட்கா வண்ணம் கண்ணாடிக் கதவு களால் மூடப்பட்டு முழு அமைதி யில் படிப்பதற்கென்றே ஒரு தனிப்பகுதி அமைக்கப்பட்டிருந்தது. செல்பேசிகள் அணைக்கப்பட வேண்டும். எந்த முணுமுணுப்பும் அங்கு இல்லை. ஆழ்ந்த அமைதி யில் படிப்பவர்களுக்கு ஆனந்த மூட்டும் அருமையான ஏற்பாடு. அதே மாடியில் கலந்துரையாடவும், சிறு கருத்துரங்குகள் நடத்தவும் ஏதுவான அறைகள் காணப்பட்டன. அனைத்திலும் கணினித்திரை உள்ளிட்ட வசதிகளுக்குக் குறைவே இல்லை. அவ்வாறு மொத்தம் 20 அறைகள் இருந்தன. 20 பேர்



கலந்துரையாட 2 அறைகள். 12 பேர் கூடி விவாதிக்க 2 அறைகள், 4 பேர் மட்டும் அமர்ந்து, பகிர்ந்து கற்க 13 அறைகள், 8 பேர் மட்டும் சிறு விவாதம் நடத்த 2 அறைகள், 7 பேர் பொதுவாக வந்து உரையாடிக் கொண்டிருக்க என்று ஒரு தனி அறை (Unconference room). சில அறைகளில் மேலே வானமும் இரவு நேர விண்மீன் களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவை தவிர மென் பொருள் சார்ந்த பணிகள். வடிவமைக்க அல்லது இசை யமைக்க ஏதுவாக 7 பேர் பணி செய்யக்கூடிய ஒரு ஸ்டுடியோ அறையும் அமைத்திருந்தனர். நூலக இணையத்தில் முன்பதிவு செய்துவிட்டு நூலக உறுப்பினர்கள் இந்த அறைகளைப் பயன்படுத் தலாம். தவறாக யாரும் இதைப் பயன்படுத்த வழியில்லை. படக் கருவி.(சி.சி.டி.வி.) அனைத்தையும் கண்காணிப்பது ஒருபுறமிருப்பினும் மக்களே அங்கு அறிவுத் தேடலுடன் தான் வருகின்றனர். மேலும் விழாக்கள், குடும்ப நிகழ்ச்சிகள் நடத்த வாடகைக்குத் தரும் அரங்கங்களும் சில இருக்கின்றன.

நூல்கள் படிக்கும் பழக்கம் உலகெங்கும் குறைந்துவரும் நிலையில் நூலகங்கள் அமெரிக் காவில் பெருகி வருவது எப்படி? என்று ஐயம் எழுந்தது. அமைதி யான சூழலில் ஆழமாக நூலைத் தேடிப் படிக்கும் அனைத்துத் தலைமுறையினரும் இன்னும் இருப்பதை அங்குக் காண முடிந்தது. அச்சு நூல் வழியாகப் படிக்க விரும்பாவிட்டாலும் கணினி

வழி பலரும் படிக்க விரும்புவதால் கணினிக்குள் உள்ள நூல்களைத் தேடிப் படிக்க 210 கணினிகளை யும் பொருத்தியிருந்தார்கள். அதற்குரிய இதமான இருக்கையில் அமர்ந்து இயக்கி யாரும் படிக்கலாம். அங்கு கணினி வழி நூல்கள் உள்ளிட்ட மொத்த நூல் களின் எண்ணிக்கை 2,84,000 என அறிந்தேன். அருகலை (Wli-Fi) வசதி நூலகம் முழுவதும் இருப்பதுடன் 93 முனைகளில் தனி அருகலை இணைப்பும் செய்யப் பட்டிருந்தது. நூலகத்தில் உள்ள மொத்த கணினி திரைகளின் எண்ணிக்கை 77. தூய்மையின் சின்னமாகக் கழிப்பறைகள் காணப் பட்டன. உணவுப் பொருள்கள் உள்ளே அனுமதிக்கப்படா நிலையில் சற்று விலகிச் சென்று உணவருந்த ஒரு காப்பிக் கடையும் இருந்தது.

நூலக வேலை நேரம் திங்கள் முதல் வியாழன் வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை என்றும் பிற நாள்களில் மாலை 6 மணிவரை எனவும் அறிந்தேன். பழைய நூல்கள், இதழ்கள் ஆகியவற்றையும் மலிவு விலையில் இங்கு வாங்க முடியும். நூலகத்திற்கு வருவோர் எந்த நூலையும் எத்தனை பக்கங் களையும் நகலச்சு செய்யலாம். கறுப்பு வெள்ளை நகலெடுக்க பக்கத்திற்கு 10 சென்ட். வண்ணத் தில் எடுக்க 25 சென்ட். நூல் முழுவதும் எடுத்துத் தரவும் தடையில்லை. இதுபோலச் செல் பேசியிலிருந்தும், மடிக்கணினியி லிருந்தும் அச்சேற்றலாம்.

இதைவிட ஒரு பெருவியப்பு காத்திருந்தது. அதாவது முப்பரி மாண நகலச்சு வசதி அங்கே செய்யப்பட்டிருந்தது. நீங்கள் தாளில் அல்லது கணினியில் கொடுக்கும் உருவை அப்படியே முப்பரி மாணத்தில் எந்திரம் வெளியேற்றும். ஒரு கூடையின் படத்தைக் கொடுத்தால் அதே வடிவில், வண்ணத்தில் கூடையை நெகிழி யில் (Plastic) தத்ரூபமாக வெளியே வரும். இப்படி எந்த உருவத்தையும் வெளிக் கொணரலாம். அதிக அளவாக அகலம், ஆழம், உயரம் முறையே 5.7“, 5.7”, 7” வரை உருவம் வெளிப்படும். ஒரு கிராமுக்கு 25 சென்ட் மட்டுமே கட்டணம். இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திச் சீனாவில் 24 மணிநேரத்தில் 10 வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். நெகிழிக்குப் பதில் உலோகங்களையும் பிறவற் றையும் கொண்டும் முப்பரிமாண நகலெடுக்கிறார்கள். நூலக உறுப்பினரானால் பல வசதிகளைப் பெறலாம். கட்டணம் ஆண்டுக்கு 50 டாலர். இங்கிருந்தபடியே வேறு பொது நூலகங்களிலிருந்தும் நூல் களைக் கடன் பெறலாம். அஞ்சலில் அனுப்புவார்கள். இப்படி மாதத்திற்கு 10 நூல்களை எடுக்கலாம். நூலகத் தின் உதவியுடன் பாஸ்போர்ட் விண்ணப்பிக்கலாம். வடிவமைப்பா ளரையோ, அச்சகத்தையோ நாடாது, உங்கள் படைப்புகளை அச்சிட்டு நூலாக்கித் தரும் வசதியும் உண்டு. உங்கள் முன்னோர் பற்றிய செய்திகளையோ, வேறு தேடல்களையோ இதழ்கள் வழி அறிய முடியுமாயின் அவை தொடர்

பான அத்தனை இதழ்களையும் தேடித் தருகிறார்கள்.

கிழமைதோறும் ஏதேனும் பயனான நிகழ்ச்சி வளாகத்தில் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. எழுத்தார்வம் மிக்கவர்களுக்கு எழுத்துப் பயிற்சி அளிக்கின்றனர். செயற்கை நுண்ணறிவு பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றனர். குழந்தைகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வண்ணம் அவர்களைப் பாடவும், கதை சொல்ல வைக்கவும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. குடும்பங்கள் ஒன்றிணைந்து பாடல், படித்தல், உரையாடல் போன்றவை நிகழ்த்தி குடும்ப உறவைப் பேணுகின்றனர். வேறு மொழிகள் கற்கவும், தனிப் பயிற்சி எடுக்கவும் வழிகாட்டுகிறார்கள். குழந்தைகள், பதின்ம வயதினர், பெரியோர் அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் பல பயிற்சிகளும் நிகழ்ச்சிகளும் நடந்த வண்ணம் உள்ளன.

டாலஸ் பெருநகரைச் சுற்றிப் பல சிற்றூர்கள் அமைந்துள்ளன. அதில் ஒரு சிற்றூர்தான் பிரிஸ்கோ. டால்ஸ் பகுதி அனைத்திலுமாக 10,000க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் வாழ்வதாக நண்பர்கள் குறிப்பிட்டனர். அப்படியாயின் தமிழ் நூல்கள் இங்கு இடம் பெறவும் தடையில்லை. தமிழ் அமைப்புகளின் பரிந்துரைகளின் மூலம் நூற்றுக்கணக்கான அமெரிக்க நூலகங்களில் தமிழ் நூல்கள் இடம் பெற்றுள்ளன. இங்கும் விரைவில் இடம்பெறச் செய்வார்கள் என நம்புகிறேன்.

ராக்கெட் உதிரி பாகங்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை இருந்த இடத்தைத் தகர்த்துவிட்டு இந்த நூலகத்தைச் சென்ற ஆண்டு 62 மில்லியன் டாலர் செலவில் (ரூ.520 கோடி) உருவாக்கியிருக்கிறார்கள். அப்பகுதி மக்களிடம் ஈட்டும் சொத்துவரியிலிருந்து ஒரு பகுதி (சிந்தாமல் சிதறாமல்) நூலகங் களுக்குச் செலவு செய்யப்படுகிறது.

இத்தகைய நூலகத்தில் அமர்ந்து மாணவர்கள் படித்தால் படித்தவை மனத்தில் ஆழமாக வேரூன்றும். படைப்பாளர்கள் எழுதத் தொடங்கினால் சொற்கள் கைகட்டிச் சேவகம் செய்யும். சென்ற இதழ் முகம் கட்டுரையை இந்த நூலகத்தில் அமர்ந்து ஒரே மூச்சில் எழுதி முடித்தேன்.

பேரறிவாலயமாக நான் உணர்ந்த இந்த நூலகத்தில் நான் பெற்ற அனுபவத்தைப் பற்றி இங்குள்ள ஒரு முன்னாள் மாணவரிடம் வியந்து பாராட்டிய போது அவர் கூறினார், 'இது ஒரு சாதாரண நூலகம். நீங்கள் நான் படித்த பல்கலைக் கழக நூலகத்தைப் பார்த்தால் என்ன சொல்வீர்களோ!' - என்றார்.

தொடர்புக்கு:
ejsundar@gmail.com
www.suttysundar.com

# வழங்கிடாரா?

இனித்திட இனித்திடப் பேசிட
இனிக்கும் தமிழ்மொழியே! - தம்பி
கனித்தமிழ் அதுதான் இனிய
கன்னித் தமிழ்தேன்!

வீசும் காற்றில் வீசும்
தென்றலாய் தமிழ்மொழியே! - தம்பி
ஏசும் பேச்சில் கலங்கா
திருப்பாய் தமிழ்மணியே!

நம்தமிழ் சிறந்து பரவிட
நற்பணி செய்தாயா? - தம்பி
இம்முறை பேணும் நம்தமிழ்
நாவில் நுழையாதா?

குழந்தை பேசிடும் இன்பம்
கொண்ட தமிழாக - தம்பி
வழக்க மாய்நீ கொள்வாய்
வாழும் செந்தமிழே!

குழந்தை நெஞ்சில் தமிழே
உலவிட விளக்காயோ! - தம்பி
பழகும் தமிழர் எல்லாம்
பாங்காய் வழங்காரா?

நீக்கும் தீதால் நன்மை
நிலைக்கும் என்றும்தான்! - தம்பி
தேக்கும் அறிவு ஒன்றால்
செழிக்கும் வாழ்க்கைதான்!

**- வே. தமிழ்மாணிக்கம்**
கோவை

(செவ்விலக்கியம்)

# தலைவி துயர்தவிர்த்த தலைவன்!

– மு. வெங்கடேச பாரதி
99651 33874

இல்லற வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது. பொருள் குறைந்ததனாலே அதனைத் தேடப் புறப்பட ஆயத்தமானான் தலைவன். தான் செல்லுகின்ற வழியினையும் தலைவியின் நிலையினையும் தலைவன் தன் நெஞ்சம் எண்ணிப் பார்த்ததைத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

மனிதரென்றால் மனமிருந்திட வேண்டும். மனமே இல்லாதவன் மரம் போன்றவன் - பட்ட மரம் போன்றவன்.

பாடாய்ப் படுத்தும் மனத்துக்குப் பயன்பட்டுத் தலைசிறந்து மனிதர் வாழ்ந்த காலம், சங்க காலம். தலைவி பிரிவிலே, தனிமையிலே தனி மயிலாகத் தவிப்பதை நினைத்துப் பார்த்த தலைவன் தன்னிடத்தில் தானே பேசிக் கொண்டான்.

'இருபது வயதுக்குள்ளும் இன்னும் செல்லாத என்னவளே! இனிய நம் வாழ்வுக்கும் என்னை நீ பேணுதற்கும் இன்னும் பிற பணிகளுக்கும் இன்றியமையாதது பொருளல்லவா? அப்பொருளைத் தேட இப்பொழுதே புறப்படப் போகிறேன் என்றேன்; சொன்னவுடனேயே சின்னவள் முகம், தன் சிங்காரம் இழந்தது.

மையுண்ட கருநீல மலர்க்கண் இரண்டுமே ஒய்யெனவே பொங்கும் ஒளியிழந்து விட்டனவே. அவளோ பின்னிவிடப் பட்ட பேரிருங் கூந்தலுக்குள், பொன்முகத்தை நிலா முகிற்குள் போனதுபோல் தான் மறைத்தாள். கொஞ்சுமொழி பேசாது நெஞ்சு வாடும் நிலையானாள்.

சேர மன்னனாகிய உதியன் போர்க் களத்திற்குச் சினத்துடன் சென்றான். அப்போர்க்களத்திலே முற்பகுதி இடத்திலே குழல் ஊதுவோர் மூங்கிலிலே செய்யப்பட்ட அழகான குழலை ஊதுவார்கள். வருகின்ற அந்தக் குழலிசை வருத்தம் மிகும் உணர்வையே தரும். அந்த உணர்விலே ஏங்குபவள் அவளாயினள். தனிமை தரும் பிரிவுத்

துன்பத்திலே பெரிதும் அவள் தவிப்பாள். அப்போது அவளின் துயரப் பார்வை எப்போதும் நெஞ்சில் இறுக்கம் தந்து கொண்டே இருக்கும்.



மான் அண்ணாந்து தனது தலையினை மேலே தூக்கிக் கிளைகளை வளைத்துத் தின்னுதலாலே இலந்தை மரம் வளைந்த கிளைகள் அடியைத் தழுவிட அழகிழந்து நிற்கும். பச்சை நிறமான அதன் காய்கள் பாதை வழியிலே கற்களோடு கலந்து பரவிக் கிடக்கும். அந்தப் பெருங்காட்டினைக் கடந்து வந்தேன். அப்பார்வைகள் என்னை விட்டு அகலவில்லை.

பிரிந்து போகிறேன் என்று சொன்னவுடனேயே பெருந்துயர் கொண்டாள் தலைவி. பொருள் தேடப் பிரிந்து போய்விட்டால் அவள்நிலை என்ன ஆகுமோ?'

இந்த இனிய பாடலை இயற்றியவர் புலவர் இளங்கீரனார்.

மூங்கில் குழலூதும் : அதாவது புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்திய பழந்தமிழரது பழக்க வழக்கங்களை இப்பாடலில் கூறியிருப்பது தீந்தமிழ்ப் புலவர் இளங்கீரனாரின் சிறப்பாகும்.

பாலைத்திணைப் பாடலான இப்பாடல் நற்றிணையில் 113ஆவது பாடலாகும்.

உழைஅணந்து உண்ட இறைவாங்கு உயர்சினைப்
புல்லரை இரத்திப் பொதிப்புறப் பைங்காய்
கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்
பெருங்காடு இறந்தும் எய்த வந்தனவால்
அருஞ்செயல் பொருட்பிணி முன்னி யாமே
சேறும் மடந்தை என்றலின் தான்தன்
நெய்தல் உண்கண் பைதல் கூரப்
பின்இருங் கூந்தலின் மறையினள் பெரிதுஅழிந்து
உதியன் மண்டிய ஒருதலை ஞாட்பின்
இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பல்அம் குழலின் ஏங்கிக்
கலங்குஅஞர் உறுவோள் புலம்புகொள் நோக்கே!

இப்பாடல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தையது.

<u>சொற்பொருள்:</u>

ஆம்பல் அம்குழல் - மூங்கில் தண்டு இசைக்கருவி
மழை - மான்
அணந்து - அண்ணாந்து
இரத்தி - இலந்தை
உதியன் - சேரமன்னன்
பொருட்பிணி - பொருளாசை நோய்

**பொருளாசை என்னுமொரு பொல்லாநோய் வந்துவிட்டால்**
**இருள்சூழும் அமைதியறும் இன்பம்போம் துன்பமுறும்!**



**சி**லம்பொலி செல்லப்பனாரின் 96ஆவது பிறந்தநாள் விழா நாமக்கல்லில் 21.9.2024 அன்று நடைபெற்றது. கவிப்பேரருவி தமிழன்பன் புலவர் கலியபெருமாள் ஆகியோர் விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர். முனைவர் அரங்க. இராமலிங்கம், புலவர் தமிழமுதன், பாரதி பாஸ்கர் ஆகியோர் உரையாற்றினர். விழாவினை சிலம்பொலியின் மகன் கொங்குவேள், மகள் மணிமேகலை ஆகியோர் சிறப்பாக நடத்தினர்.

அமிழ்தத் தமிழ் ஆய்வரங்கம் சார்பில் சென்னையிலிருந்து இளவரச அமிழ்தன் இணையர், புலவர் தமிழமுதன் இணையர், புலவர் ப.வீரமணி, நற்றமிழ்க்கவிஞர் ந. பாபு, கவிஞர் சொ. பத்மநாபன், கவிஞர் ஞால இரவிச்சந்திரன், கவிக்கோ துரை. வசந்தராான்,முனைவர் முகம் இளமாறன் பேரா.கலை.செழியன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

# குட்ட மறக்காதே!

உண்மையை மறைத்துத் தினமும் பொய்யை
உளறிக் கொட்டாதே - பல
நன்மைகள் எதுவோ உலகுக் கதனை
நவிலா திருக்காதே!

திறமை இல்லா மனிதனைத் தூக்கித்
தெருவில் திரியாதே - தரும்
பொருளைப் பெற்று ஆகா என்றே
போற்றிப் புகழாதே!

உரையை மடக்கிக் கவிதை என்றே
உரக்கப் படிக்காதே - தன்
குறையை மறைக்கக் காசு கொடுத்துக்
கவிஞனாய் நடிக்காதே!

போகிற போக்கில் எழுதும் போக்கைப்
போற்றிப் புகழாதே - அந்தக்
காகிதம் தெய்வம்; கவிதை என்று
கண்டதைக் கிறுக்காதே!

கவிதை கருத்தாய் இருந்தால் கைகள்
தட்ட மறக்காதே - பிறர்
செவியில் இடிபோல் வார்த்தை விழுந்தால்
குட்டவும் மறக்காதே - தலையில்
குட்டவும் மறக்காதே!

**- பா. சர்தார்சிங்**
98845 63139

அரும்பாவூர் **மருத்துவர் க. கோபால்** அவர்கள் தம் பவழ விழாவையொட்டி முகம் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கியுள்ளார்.

## 'தமிழ்நாடு தமிழர்க்கே!' தீர்மானம் நிறைவேற்றிய 1937 திருச்சி மாநாடு!

# தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் ஆற்றிய வரவேற்புரை!



**த**மிழவேள் த.வே. உமா மகேசுவரன் பிள்ளை - தஞ்சாவூர் மாவட்டம் - கரந்தையில் 1911ஆம் ஆண்டில் ஐந்தாம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர். நான்காம் தமிழ்ச்சங்கம் மதுரையில் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் 1901ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. வடமொழி மட்டுமே கற்பிக்கப் பட்டுவந்த திருவையாறு கல்லூரியில் தமிழ் மொழியைக் கற்கும்படி செய்தவர் உமா மகேசுவரனார். 'தமிழ்ப்பொழில்' இதழ் மூலம் தமிழ் மொழியின் தொன்மையை நிலைநாட்டியவர். 1937இல் இந்தி மொழி திணிக்கப்பட்டபோது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் முன் நின்றவர். திருச்சிராப்பள்ளியில் 26.12.1937இல் மூன்றாவது சென்னை மாகாணத் தமிழர் மாநாடு சார்பாக 'இந்தி எதிர்ப்பு மாநாடு' நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார் ஆற்றிய வரவேற்புரையை கரந்தையிலுள்ள தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம் குறுநூலாக வெளியிட்டது. அதன் சுருக்கம் இது:

**ச**ரித காலத்திற்கும் மிக மிக முற்பட்ட காலந்தொட்டு தமிழ் மக்கள் தலைசிறந்த நாகரிகமும் கொற்றமும் வெற்றியும் உடைய வராய் தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் குடிமக்கள். தமிழர், நாகரிகர் என்றால் தமிழர் அருளும் இரக்கமும் உடையவர்கள் என்பதே பொருள். எவனர், அசீரியர், மூர்க்காரர், ஆரியர், ஆகிய அயலவர் எவர் வரினும் எரிவில் லாது அவர்களை வரவேற்று

உண்டி, உறையுள் முதலியன தந்து நட்புரிமையுடன் போற்றும் பெற்றியினர்.

தமிழ் மக்களின் கொடை மடம், படைமடம் பற்றிய செய்திகள் புறநானூறு முதலிய நூல்களில் பரக்கக் காணலாம். தமிழ்நாட்டின் எல்லையிலே குடியேறிய ஒரு சாரார், தமிழ் மக்களிடம் பொருளும் பூசனையும் பெற்று வாழ்பவராய் இருந்தும் தாங்கள் பூமியில் வதியும் தேவர்களெனக் கருதி, தாமே உயர்ந்த இனத்தவர் என்றும் ஏனோரெல்லாம் இழிந்தோர் என்றும் கொள்கை கொண்டிருந்து வருகின்றனர். இவர்கள் சுயநல கருத்தே உடையவர். தம் இனத்தவரே உண்ணவும், தம்மவரே நூல் பயிலவும், அற நிலையங்களைப் பிறர் பொருளால் தமக்கே அமைத்துக் கொள்ளவும், வழி களைத் தேடிக் கொள்பவர். தீண்டாமை என்னும் கருத்துக்கு உறைவிடமாயுள்ளவர். கோயில், குளம், வீதி முதலிய பொது இடங்களில் எல்லாம் தனக்கெனத் தனி இடம் வைத்துக் கொள்பவர்.

ஒரு குலத்திற்கு ஒரு நீதி! மனு முதலிய மிருதிகளில் வகுத்துக் கொண்டவர். இத்தகை யோர் நம்மிடையே வதிந்து தமிழ் மக்களின் வளம் அனைத்தையும் தமதாக்கிக் கொண்டாலும், நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாது உடனிருந்தும் தனித்த பிரிவின ராய், இருந்து வருவது கண்கூடு. அவர்கள் அதி வருணாசிரமியாகிய துறவி ஆகலாம்; மத மாற்றத்தால் கிறிஸ்தவர் முதலியோர் ஆகலாம்; சீர்திருத்தக்காரர் ஆகலாம்; கதர் அணியலாம்; கொழுத்த தேசிய வாதி ஆகலாம்! அவர்கள் தங்கள் குருதியில் உறைந்து ஓடும் சுயநலத்தை விடுவதோ அரிது.

தமிழ் மக்களோவெனின் தன்னலமே அறியாதவர் - பிறர் நலத்தையே தன்னலமாப் பேணு பவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உறுதியைப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே கூறியவர். 'யான் பெற்ற செல்வம் பெருக இவ்வையகம்' எனும் கொள்கையினர். 'இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்' எனும் இரண்டு சாதி அல்லது பிறிதொரு சாதி அறியாதவர்.

'சிவனென மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடி நவனுடை னுரைக, அவனொடு கலந்து பேசுக, அவனொடருகிருந் துண்ணுக' எனும் கொள்கையில் உறைந்தவர். திருக்குறள் போன்ற அற நூலுக்குரியவர். ஊன்பையில் வேள்விகளை மறுத்தவர்; இத்தகைய சீரிய கொள்கைகள் யாவையும் ஆரிய மக்களின் நீடிய தொடர்பால் இப்போதும் யாம் மறந்து வருகின்றோம். சாதியைச் சமயமாக்கியும், சமயத்தைச் சாதியாக்கியும் பெண் மக்களின் உரிமைகளைக் கவர்ந்தும், சாதிப் பெயரால் மக்களை இழிவுபடுத்தும் எண்ணிறந்த பிளவுகளையும் உண்டு பண்ணி, அவற்றால்

நாங்கள் அல்லற்பட, அவர்கள் இருமாந்திருக்கின்றனர். இற்றை நாளில் மக்கள் சற்று அறிவு விளக்கம் பெற்று, சமயக் கட்டு களை ஆய்ந்து உண்மை காண முற்படுவதை அறிந்து, சமயத் துறையில் பணி செய்வார் ஒரு பகுதியும் ஆக, அணிவகுத்துக் கொண்டு, தாம் ஆளவும், நம்மை அடிபடுத்தவும் முனைந்து நிற்கின் றனர். இவர்கள் சார்ந்து இருக்கும் அரசியல் கட்சியில் தமிழ் மக்கள் மிகு தொகையினராய் இருந்தும், மதி நுட்பமும், தன்னம்பிக்கையும் இல்லாத காரணத்தால், பார்ப்பனர் தலைமையில் இருக்கவும், நம்மவர் அடிமை செய்யவும் நேர்ந்து விட்டது. இந்நிலை ஏற்பட்டு 150 நாட்கள் கூட ஆகவில்லை, (இராச கோபாலாச்சாரியார் 1937இல் சூலை மாதம் முதலமைச்சராகி!) இதற்குள்ளாக ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும் ஆட்சி முறையையும் பார்க்க, நெஞ்சம் நடுங்குகிறது.

விடுதலையையும் குடியாட்சி யையும் விளைத்த நாடு, அவற்றை முற்றுமே இழந்து, ஒரு மனித னுடைய எதேச்சை அதிகாரத்தில் அகப்பட்டு அலங்கோலப்படுகிறது. இத்தகைய ஆட்சி முறையால் நிகழ விருக்கம் தீங்குகளை அறிந்து, நமது பிறப்பு உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைத் தேடுதற் கெனவே யாம் கூடியிருக்கின் றோம்.

அரசியல் ஆட்சியைத் தமது இணையற்ற வெற்றியால் கைக் கொண்ட தலைவர்கள், செய்வன, தவிர்வன யாவை எனத் தெரியாது, அரசியலை கைக்கொண்டால் தாம் செய்வேன் எனக்கூறிய உறுதி களை அறவே மறந்து, மக்களுள் எப்பகுதியினரும் வேண்டாத கருமத்தை வன்கண்மையால் நிறுவ முற்படுவது குடியாட்சி முறைக்கும் தாம் மேற்கொண்டு ஒழுகுவதாகக் கூறிவரும் மக்கள் ஊழியத்திற்கும் முற்றும் முரண்பட்ட தாகும்.

அயன்மொழியாகிய இந்தி யை, தமிழ்நாட்டில் உள்ள பள்ளி களில் 1, 2, 3 பாரங்களில் கட்டாயப் பாடமாக்கத் துணிந்தது கொடுங் கோன்மையாகும். இத்தீய செயலால் தமிழ்நாடு எவ்வித நலனும் அடைவதற்கு இல்லை என்பது சரதம். மக்களின் கல்வி முன்னேற்றமும் அதனை அடி யொற்றிய பிற நலன்களும் பாழ்பட் டொழியும்.

வடவாரியரின் தன்னலக் கொள்கைகளாகிய இரும்பு விலங்கில் தமிழ் மக்கள் பிணிக்கப் பெற்று, மீளா அடிமைகள் ஆக்கப் பெறுவர். இத்தகைய தீமைகளை விளைக்கும் இந்தி படையெடுப்பின் வரலாற்றினை தமிழ் மக்கள் நன்கு ஆராய வேண்டும்.

இந்தி மொழியானது தமிழ் நாட்டில் செலவாணியற்றது. ஒருவரும் ஒருபோதும் வேண்டா தது. 'இந்தி மொழியைத் தமிழ் நாட்டில் ஆட்சியில் கொணர்வேன்

என வடநாட்டினரிடம் தான் கூறிய காரணத்தால் இந்தத் திட்டத்தை வகுத்தேன்' என முதல் மந்திரியார் சொல்லுகிறார். இது அரசியல் முறையா? தக்கதொரு காரணமா?

உயர்தர தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் வித்துவான்கள் மிக மிக அவசியமாய் வேண்டப்பட்டும், கூடாது என ஒதுக்கப்படுகின்றனர். உயர்தரப் பள்ளிகளில் இரண்டிற்குக் குறையாத புலவர்களுக்கு வேலை இருந்தும், அவர்களுக்கு இடம் தராதது பள்ளி இறுதி, நடுத்தரத் தேர்வு, பி.ஏ., முதலிய தேர்வு பெற்றவர்களைக் கொண்டு வித்துவான்களுக்குரிய இடங்களை நிரப்பிக் கொள்ளுகின்றனர். கல்லூரிப் பாடசாலை, உயர்தரப் பள்ளி ஆகிய எல்லா பாடசாலைகளிலும் தமிழ்ப் புலவர்களுக்கு மற்ற ஆசிரியர்களுடன் ஒத்த மதிப்பும் உரிமையும் வழங்கப்படுவதில்லை. சென்னை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களில் வடமொழியாளர் தமிழ் மொழிக்கும் உண்மைத் தமிழ்ப் புலவர்கட்கும் இழைத்துவரும் கேடுகள் கணக்கிறந்தன. இஃது இவ்வாறு இருப்பதை அறிந்தும் இக்குறைபாடுகளை அகற்ற முற்படாது இந்தியை வளர்க்கவும், இந்தி ஆசிரியர்களை நியமித்துப் பேணவும் தலைப்பட்டு, இலட்சக் கணக்கான பணத்தை இத்துறையில் செலவிடத் துணிவது மதியீனமல்லவா? இதனைச் சிந்திக்கும் போது 'ஏதிலார் ஆரத்தமர் பசிப்பர் பேதை, பெருஞ்செல்வ முற்றக் கடை' என்ற முதுமொழி நினைவிற்கு வருகின்றது.

இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்குவதன் காரணம் மனத்திற்குத் தோன்றியவாறெல்லாம் பேசப்பட்டு வருகின்றது. அவை பொருளற்ற வெற்றுரைகள் என தலைவராகிய மூதறிஞர்களால் தக்க ஏதுக்களுடன் மறுக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தியப் பொதுமொழி ஒன்று வேண்டும் என்பது மந்திரிமார் கூறிவரும் காரணங்களில் ஒன்று. ஒவ்வொரு மொழியினரும் தத்தம் தாய் மொழியிலே தமது கருத்தை விளக்கும் உரிமையானது மறுக்கப்படலாகாது என்பதே எமது முடிந்த கொள்கை!

தமிழ் மக்களே! இந்த அடிமை வாழ்வினின்றும் விடுதலை உண்டா? விடுதலை பெறுவது எப்படி? தமிழர்களாகிய யாம் இனி செய்ய வேண்டுவது என்ன? என்றெல்லாம் கருதி முடிப்பதற்கே இங்குக் குழுமி இருக்கின்றோம்.

மக்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியும் அறிவுமே அடிப்படை. நம்மவரிற் பெரும்பாலார் மடம் கொன்று அறிவதற்கான கல்வியைத் தொடங்கவும், வேண்டிய அளவு கல்வியைப் பயிலவும் தனித்தமிழ் கலாசாலைகள் நாடெங்கும் நிறுவப்பட வேண்டும்.

அரசியலார் செலவில் தொடக்கக் கல்லூரிகள் நிறுவவும் ஆங்கெல்லாம் தாய் மொழியில் கல்வி பயிலவும், கல்லா மாக்கள்

அனைவரையும் கட்டாயப் படுத்து மாறு அரசியலாரைத் தூண்ட வேண்டும். உயர்தர தமிழ்க் கல்வியை அன்றி அறிவுக்கலை, கவின்கலை, மருத்துவம், சிற்பம், ஓவியம் ஆகிய தொழில் கலைகள் அனைத்தையும் தமிழ் மொழியில் பயிலுவதற்கான பல்கலைக் கழகம் ஒன்றேனும் நிறுவி, தமிழ் மக்களால் பேணி வளர்க்கப் பெற வேண்டும்.

தெலுங்கர், கன்னடர், மலையாளர் ஆகிய பெருமக்கள் தனித்தும் ஒருங்கு சேர்ந்தும் தத்தம் மொழியையும் இனத்தவ ரையும் வளர்த்துவரும் வெற்றிமை களை யாம் கருதினோம் இல்லை. தமிழ்நாட்டின் எல்லையில் தனித்த தமிழ்மொழி கல்லூரி ஒன்று தானும் காண்பதற்கில்லை! இந்தி மொழியின் வளர்ச்சி தமிழர் உதவியில் வளம்பெற்று வரு கின்றது. பிணமொழி (Classical) எனக் குறிக்கப் படும் வடமொழி யையும் பயனற்ற இந்தி மொழி யையும் வளர்க்கும் பொருட்டு, தமது செல்வங்களை வரையாது கொடுக்கும் தமிழ் மக்கள், தமது உயிரினும் சிறந்த தாய்மொழி யைப் போற்றாதிருப்பது ஏனோ?

தமிழ் வளர்ச்சியிலும் தமிழ் மக்களின் நலப்பாட்டிலும் கருத் துடைய அறிஞர்கள் ஊரெங்கும் கிளர்ச்சி செய்து, தமிழ் மக்களை அறைகூவி எழுப்பி, தமிழ் சங்கங்கள் நிறுவியும், பெருந் தொகைகள் திரட்டியும், தனித்தமிழ் கல்லூரிகளும், படிப்பிடங்களும், உடற்பயிற்சிக் களரிகளும், தொழில் நிலையங்களும், தமிழ் மக்களின் அறிவு - செயல் - ஆக்கங்களை வளர்க்கும் வசதிகளும் அமைக்க முற்பட வேண்டும். இங்குக் கூறிய வாறு பெரு நோக்கங்களுடன், பணிபுரிய தலைப்படும் சங்கங்கள் யாவும் நடுவிடத்திலுள்ள ஒரு சங்கத்துடன் இணைத்துக் கொள்ளவும், ஆக்க வேலைகளைத் தொடங்கி நடத்தவும் ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து, தொடர்பு கொண்ட சங்கங்கள் யாவும் மேற்கொண்டு அதனை நிறைவேற்றவும் வேண்டும்.

இத்தகைய நற்கருமங்கள் முட்டின்றி முடிதற்கான உதவி களைப் புரிந்து துணை நிற்கும்படி தமிழ்நாட்டுத் தலைவர்களை நெருங்கிப் பணிகொள்ள வேண்டும். பஞ்சாய்து, ஜில்லா, நகரமாகிய கழகங்களிலும் சட்ட சபைகளிலும் நம்முடைய உதவி யால் பதவிகள் பெற்றிருக்கும் உறுப் பினர்கள் தமிழ்நாட்டில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்படாமல் தடுக்கவும், தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாக்கவும் முனைந்து வேலை செய்யுமாறு தூண்ட வேண்டும். 1, 2, 3 பாரங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அமைக்கும் பள்ளிக் கூடங்கட்கு மாணவர்களை அனுப்பாது நிறுத்த வேண்டும்.

அப்பள்ளிக் கூடங்களில் அமர்ந்து கல்வி பயில மாட்டோம் எனும் நல்லுணர்ச்சியையும் உறுதிப் பாட்டையும் மாணவர்கள்

அடையுமாறு முறையான நெறிகளில் எல்லாம் அவர்களை திரட்டுதல் வேண்டும். இவ்வாறெல்லாம் அரும் பணிகளை ஆற்றுவதற்கு, செவ்விய மனமும், சிறந்த குறிக்கோளும், மன உறுதியும், தாய்மொழிப் பற்றும், ஆள்வினை உடைமையும் உடைய தொண்டர் படைகள் நாடெங்கும் பணி செய்யத் தொடங்க வேண்டும்.

இந்தியப் பொதுமொழி என்ற புனைபெயரால் இந்தி எனும் வடமொழி தமிழ் நிலத்தில் நுழைந்து ஆரியக் கொள்கைளை வளர்த்து, தமிழர் நாகரிகம் எனும் வான் பயிரை அழிக்காது காக்கும் பொருட்டு, தமிழர் அறநெறி ஆகிய கொழுகொம்புகளில் தமிழ் மொழியாகிய வேலியிட்டு அயலவர் ஆகிய பட்டிகள் நுழையாது அரண் செய்து தமிழ் மாகாணத்தைத் தனியே பிரித்து, பொதுநலத்தையே பேணும் தமிழரசு ஆட்சி செய்தல் வேண்டும். (1937இல் இம்மாநாட்டில் தமிழ்நாடு தமிழர்க்கே தீர்மானம் நிறைவேற்றினர் - த.க.)

மெய்யன்பர்களே, மாட்சிமை மிக்க தலைவர் அவர்களும் நன்மதிப்பும் மன உறுதியும் கொண்ட உண்மைத் தமிழ் மக்களாகிய நீங்களும், தமிழ் நிலத்தில் விரவி இருக்கும் தீமைகளை அகற்றவும், ஒற்றுமைப் பண்பை வளர்க்கவும், நமது சமுதாய நிலையை மேன்மேலும் உயர்த்தவும், இன்றியமையாத சாதனம் மற்றொன்று உளது. அது நாட்டின் நிகழ்ச்சிகளை உள்ளவாறு உணர்த்தும் 'தினசரி' எனப்படும் 'நாளிதழ்' ஆகும்.

மாண்டொழிந்த ஜஸ்டிஸ் இருப்பதா? இறப்பதா? என இயங்கும் 'விடுதலை' போன்ற தாள்கள் மிக மிகத் தேவை. இவை நமக்கு உயிர்நாடி போன்றவை. இவற்றின் வாழ்வில் நமது வாழ்வு! இவற்றின் தாழ்வில் நமது தாழ்வு! என்று உறுதியாக மனத்தில் கொள்ள வேண்டும்.

இதுபோதில் தமிழ் உலகில் உலவிவரும் 'தாள்கள்' நாட்டுக்கு கேடு சூழ்வன. பார்ப்பன சார்புடையன, தமிழரின் அரிய செயல்ளைப் புறம் பழிப்பன. இந்தி எதிர்ப்புகளும் மறுப்புகளும் கோடிக் கணக்கென நாடெங்கம் நிகழ்ந்துவர அவை முற்றும் மறைக்கப்படுகின்றன. உத்தம பொதுவாகவும் சின்னஞ்சிறு முயற்சிகள் ஆகவும் பல தாள்கள் தோன்றுதல் நலமல்ல! ஒன்றேனும் வளனுற போற்றி வளர்க்கப் பெற வேண்டும்.

தமிழ்த்தொண்டன்,
**ந.வே. உமா மகேஸ்வரன்**
தஞ்சாவூர் 21.12.1937

*நன்றி:*
**தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம் -** பக்.26-28

2024 செப்டம்பர்

# முகத்தில் முகம் பார்க்கலாம்

(15 ஆம் நாளுக்குள் வரும் திறனாய்வுகள் மட்டுமே வெளியிடப் பெறுகின்றன. உங்களைக் கவர்ந்த ஓரிரு படைப்புகளை மட்டுமே திறனாய்வு செய்க!)

☆ **ஓவியர் மு. ஷேக்** (பம்மல்): திருமதி சாந்தா பாலகிருஷ்ணன் அவர்கள் வெறும் இளமாறன் கவிதைகள் குறித்து மட்டும் ஆராய வில்லை. தமிழ் இலக்கியங்களையும் தமிழர் வரலாற்றையும் ஆராய்ந்து தெளிவான ஆதாரங்களோடு சுட்டிக் காட்டி எழுதுவது மிகச் சிறப்பு. இசை குறித்த அவரது எழுத்தும் இளமாறன் குறித்த அவரது கவிதைகளின் ஆய்வும் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களை எழுப்பும் மத்தளம். (ஆ) இ.ஜெ.சுந்தர் தமிழ்ப் பணிகளுக்காகவே வாழ்ந்து எழுதக் கூடியவர். அவர் எழுதும் அறிவியலும் தமிழுப்பணியும் பெரிய பத்திரிகைகளில் கூட வருவது அரிது. இணைய ஆற்றுப்படை எழுதிய மு.இளங்கோவனைப் பாராட்டுகிறோம்.

☆ **காஞ்சி என்.செல்வராஜ்** (செ.41): முனைவர் கார்முகிலோன் பற்றிய கட்டுரை அவரது ஆழமான தமிழுணர்வு, ஈகை குணம், மறந்தும் மறக்க முடியாத எம்.கே.டி. பற்றிய செய்திகள் வியப்பில் ஆழ்த்தின. (ஆ) பல சிறைச்சாலைகளை மூடும் திறன் நூலகங்களுக்கு உண்டு. எனவே, அரசு நூலகங்களுக்கு நூல்கள் வாங்கும் முறையில் தளர்வு செய்து நிறைய கொள்முதல் செய்ய வேண்டும். தனிமனிதர் பதிப்பிக்கும் நூல்களுக்கு முன்னுரிமை தர வேண்டும்.

☆ **கருமலைத் தமிழாழன்** (ஓசூர்): தலையங்கத்தில் கூறியுள்ள கருத்துகள், ஆண்டிற்கு ஓரிரு நூல்களை வெளியிடும் எழுத்தாளர்களின் உள்ளக் குமுறலை அப்படியே எதிரொலித்தது. ஓரளவு கணினியைக் கையாளத் தெரிந்ததனால் பலமுறை முயற்சி செய்து புதிய முறையில் நூல்களைப் பதிவு செய்தேன். கணினியே இயக்கத் தெரியாத பல எழுத்தாள நண்பர்கள் கணினி மையத்திற்குச் சென்று பலவித இன்னல் களுக்கு ஆளானார்கள் என்பதை அறிவேன். இதில் வெளிப்படைத் தன்மை என்பது கிஞ்சித்தும் இல்லை. இது ஊழலுக்கு மட்டுமே வழிவகுக்கும்.

☆ **புலவர் ந. ஞானசேகரன்** (திருலோக்கி): பொதுநூலகங்களுக்கு நூல்கள் கொள்முதல் என்ற தலையங்க உரையில் அரசு அலுவலர் களுக்கு 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' எனும் முடிப்பு அரிய முத்தாய்ப்பு. (ஆ) இளமாறனின் கவிதை வரிகளுக்கேற்ப சான்றுகளைத் தேடிப்பிடித்து சாந்தா அம்மையார் எழுதும் ஆய்வுக் கட்டுரை பெரிதும் வாசகர் ஈர்ப்பினைப் பெறுகிறது. (இ) முனைவர் நாக.கணேசன் முனைப்பில் முனைவர் மு. இளங்கோவன் படைத்துள்ள 'இணைய ஆற்றுப்படை' எனும் நூல் சங்ககாலப் புலவோரை நினைத்துப் பார்க்க வைக்கிறது.

☆ **திருமதி சாந்தா பாலகிருஷ்ணன்** (குமணன்துறை): நல்ல குறிக்கோளைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதிவரும் தனி எழுத்தாளர்கள் நூல்களும், சிறப்பான இலட்சியத்துடன் நடத்தப்பட்டுவரும் சிற்றிதழ்களும் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளாகவே வலம் வருகின்றன. அவைகளைப் பொது மக்களிடமும் மாணவர்களிடமும் கொண்டுபோய்ச் சேர்ப்பதனால் ஏற்படும் அறிவுசார் விழிப்புணர்வுத் தாக்கங்களைத் தவிர்ப்பதற்காகவே, நூல் கொள்முதல் ஆணை 2024இல் உள்ள விதி முறைகள் உள்ளன. இது முதலமைச்சரின் கவனத்திற்குச் செல்ல வேண்டும். (ஆ) சுட்டி சுந்தரின் இணைய ஆற்றுப்படை பற்றிய கட்டுரையில் உள்ள தகவல்கள் வாயிலாக, முனைவர் நாக. கணேசன் மற்றும் முனைவர் மு. இளங்கோவன் ஆகியோரின் இணையப் பணிகள் அறிந்துகொள்ள முடிந்தது.

☆ **புலவர் தங்க. சங்கரபாண்டியன்** (பொழிச்சலூர்): தனிநபர் நூலக ஆணை பெற முடியாத வகையில் கொண்டு வந்துள்ள இந்த நூலகக் கொள்முதல் கொள்கை அறிக்கை அவசியம் முதலமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு செல்ல வேண்டும். (ஆ) திரைப்பட இயக்குநர் ராசி.அழகப்பன் எழுதிய முனைவர் சரளா இராசகோபாலன் பற்றிய மனந்திறந்த கட்டுரை என் உள்ளத்தை வெகுவாகக் கொள்ளை கொண்டது. (இ) உலகத் தமிழுரை ஒன்றிணைக்கும் இணைய ஆற்றுப்படை என்னும் சுட்டி சுந்தரின் எழுத்தோவியம் மிகவும் பாராட்டத் தக்கது.

☆ **தீபம் எஸ்.திருமலை** (செ.41): பொது நூலகங்களுக்கு நூல்கள் கொள்முதல் தலையங்கம் நன்று. படிப்பதே குறைந்து வருகிறது. இதில் நூல்கள் வாங்குவதும் குறைந்துவிடும். நூல்கள் வாங்காமல் இருக்க வழிதான் இது. (ஆ) முனைவர் மலையமான், வெங்கடேச பாரதி, ராசி.அழகப்பனின் சரளா இராசகோபாலன் ப்றிறய கட்டுரை, சாந்தா பாலகிருஷ்ணனின் ஆய்வு என அனைத்தும் அருமை.

☆ **வேலூர் மூர்த்தி** (செ.100): உச்சநீதி மன்றம் பல வழக்குகளில் ஒன்றிய அரசுக்குத் தலையில் குட்டுகள் வைத்தும் திருந்தவில்லை. ஆணவ ஆட்சி தொடர்கிறது. நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காத ஆட்சி. (ஆ) பகத்சிங் கடைசி ஆசை நிறைவேறிய தகவல் வியப்பாக இருந்தது.

☆ **நவீன்குமார்** (நடுவிக்கோட்டை): முகப்போவிய நாயகர் முனைவர் கார்முகிலோன் அவர்களின் பன்முக ஆற்றல்களை அறியத் தந்திருப்பது சிறப்பு. நிறைய சிற்றிதழ்களில் வாசகர் போட்டி வைத்து, பரிசுகள் அளித்து மகிழ்பவர். சிற்றிதழ்களில் புழங்கும் என்னைப் போன்ற பலருக்கு கார்முகிலோன் பெயர் நன்கு பரிச்சயம். (ஆ) முனைவர் சரளா இராசகோபாலன் கட்டுரை, படிக்கப் படிக்க பரவசம் தந்த கட்டுரை. பசுமையான நெகிழ வைக்கும் நினைவுகளைத் தந்திருக்கிறார் ராசி. அழகப்பன். முனைவர் இளமாறன் அவர்களும் பேராசிரியர் சரளா அம்மாவின் மாணவர் என்பதை அறிந்து மகிழ்ந்தேன்.

**பம்மல் கை. நடராசன்:** புத்தகங்களைப் படிக்கும் மக்களின் உணர்வினைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கும் அரசிற்கும் ஆலோசனை வழங்கியது தலையங்கம். (ஆ) ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதரின் செயல்பாடுகளை நினைவு கூர்ந்தது பாராட்டத் தக்கது. (இ) தமிழின் தொன்மையைப் பறைசாற்றும் விதமாக தமிழ்மொழியின் இசையினை எடுத்துரைத்த ஆசிரியரின் துணிவு வரவேற்கக் கூடியது. (ஈ) கல்வியின் இடஒதுக்கீடு குறித்து அன்றே போராட்டம் நடத்திய தந்தை பெரியாரின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே இன்றைய நிலைமை.

## அறிவோம் வரலாறு!

**தி**ருவிதாங்கூர் சமஸ்தானமானது இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தபோது, சுதந்திரம் பெறவில்லை. ஆங்கிலேயருடனான இணக்கமான உறவினால் தனித்து இயங்கியது. பின்னர் இந்தியாவுடன் இணைந்தபோது மலையாள மொழி பேசும் கேரளாவுடன் இணைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர்களான நாடார்கள் பெருவாரியாக வசித்து வந்தனர். அவர்கள் தங்களை கேரளாவுடன் இணைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமிழகமான சென்னை மாகாணத்துடன் இணைக்க வேண்டும் என்றும் கூறி வக்கீல் நேசமணி தலைமையில் போராடினர். இப்போராட்டம் கன்னியாகுமரிக்கு அடுத்தபடியாக தமிழர்கள் வாழும் தேவிகுளம், பீர்மேடு ஆகிய வட்டாங்களிலும் பரவத் தொடங்கியது.



# வரப்பெற்ற (புது) நூல்கள்!

✯ **அரும்பாவூர் மருத்துவர் க.கோபால் பவழ விழாச் சிறப்பு மலர்:** விலை இல்லை. 215 பக்கங்கள்.

அரும்பாவூரில் க.கோ. மருத்துவமனை நடத்திவரும் மதுத்துவர் க. கோபால் திருக்குறளில் ஆழங்கால் பெற்றவர். நூலாசிரியராக, இதழாசிரியராக, இலக்கியவாதியாக வலம் வருபவர். இவரது தமிழிலக்கியப் பணிகளைப் பாராட்டி 95 தமிழ் ஆளுமைகள் வழங்கி யுள்ள பாராட்டுகளின் தொகுப்பு. மலர் நேர்த்தியாக தயாரிக்கப்பட்டுள்ளது.

✯ **மணிச்சிகை:** - சுந்தர பழனியப்பன், ரூ.100/- வெளியீடு: சகுந்தலா பதிப்பகம், பண்ணுருட்டி, பேச: 98423 45719

துளிப்பா உலகில் தனித்துவமாக விளங்கும் இந்நூலாசிரியர் தம் சிந்தனைத் துளிகளை துளிப்பாவாகக் தூவியுள்ளார்.

✯ **மீ** (கவிதைத் தொகுப்பு): - உமா சுப்பிரமணியம், ரூ,125/- அழகிய தமிழ்ப் பதிப்பகம், எண்.2, சரஸ்வதி நகர், 7ஆவது தெரு, திருவொற்றியூர், சென்னை - 600 019. பேச: 97899 79440

வாழ்வியலும், சமுதாயச் சிந்தனைகளும் கைகோத்துள்ள கவிதைகள். படிக்கும்போதே மனத்தில் புதிய வீச்சுகளை ஏற்படுத்து கின்றன.

✯ **விரிகதிர் விதைகள்:** - புலவர் கதிர்மதியன், ரூ.300/- பழனிவேலா பதிப்பகம், 11, நான்காவது குறுக்குத் தெரு, நுகும்பல் அஞ்சல், செய்யூர் வட்டம் - 603 313. செங்கை மாவட்டம். பேச: 97912 30063

மரபுப் பாக்களில் மலர்ந்துள்ள கவிதைப் பூங்கா. மனிதத்தையும், சமுதாயத்தையுறம் சிறக்கப் பாடியுள்ளார் ஆசிரியர். அவரது பரந்துபட்ட ஆற்றல் கவிதைகளில் பளிச்சிடுகின்றன.

# 100 கவிஞர்களுக்குக் கலைஞர் விருது!



வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கமும், கவிதை உறவு இதழும் இணைந்து நடத்திய 100 கவிஞர்களுக்குக் கலைஞர் விருது வழங்கும் விழா 23.09.2024 அன்று சென்னை இராணி சீதை அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வள்ளல்நேசன் டாக்டர் ஜெயராஜமூர்த்தி, கவிச்சுடர் கவிதைப் பித்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு மா. சுப்பிரமணியன் அவர்கள் முகம் ஆசிரியர் முனைவர் இளமாறன் உட்பட 100 கவிஞர்களுக்குக் கலைஞர் விருது வழங்கி விழாப் பேருரையாற்றினார். கவிதை உறவின் ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கூல்ஈவண்ட்ஸ் குமார் நிகழ்ச்சிகளை நிருவகித்தார்.

தொடக்கத்தில் செல்வி வர்ஷினி அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியும், கருநாடக இசைப்பாடகி லலிதா மோகன் அவர்கள் மொழி வாழ்த்தும் பாடினர். திருமதி ரேகா மணி நன்றியுரை கூறினார்.

100 கவிஞர்களுக்கு விருது வழங்குவதில் எவ்வித குழப்பமும் இல்லாமல் 10 அணிகளாகப் பிரித்து அணிக்குப் 10 பேர் வீதம் இணைத்து முறையாக விருதுகள் வழங்கப் பெற்றன. கவிஞர் தமிழ்இயலன், கவிஞர் எஸ்.விஜயகிருஷ்ணன், புலவர் சு.மதியழகன், தொலைபேசி மீரான், கவிஞர் சுப. சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் விருது வழங்கும் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினர். விருதாளர்களுக்கு விருதும், ராம்ராஜ் காட்டன் வழங்கிய வேட்டி, துண்டு, புடவை அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. இணைந்து செயல்பட்டால் எல்லாவற்றையும் வெல்லலாம் என்பதற்குச் சான்றாக இவ்விழா நடந்தேறியது.

# மலையினும் மாணப் பெரிது!

எண்ணுகையில் தாளில் எழுதுகையில், பேசுகையில்
உண்ணுகையில் சாய்ந்தே உறங்குகையில் - பண்ணும்
நலவினையில் நாடோறும் நற்றமிழில் தோய்தல்
மலையினும் மாணப் பெரிது.

ஒப்பியுள்ள தம்பெயரும், ஒப்பமும் முன்னெழுத்தும்
ஒப்பில் தமிழில் உவந்தமைத்தே - செப்பமுறப்
பலருமிதைப் பின்பற்றப் பாடாற்றி வாழ்தல்
மலையினும் மாணப் பெரிது.

இருகையும் கூப்பியிங்கே இன்சொல் வணக்கம்
அருமையாய்ச் சொல்லல் அழகாம் - பெருமை
குலைக்கும் பிறமொழியில் கூறாது வாழ்தல்
மலையினும் மாணப் பெரிது.

வண்டமி ழேகுறியாய் வள்ளுவ மேநெறியாய்த்
தண்டமிழர் வாழ்வு தழைக்கட்டும் - மீண்டும்
கலவையாம் நாகரிகம் கைவிட்டு வாழ்தல்
மலையினும் மாணப் பெரிது.

பெற்றோரை நல்லுயிரைப் பீடுடைய நம்விழியைப்
பற்றுடனே பேணுகின்ற பாங்கேபோல் - முற்றாய்த்
தலைப்பணியாய் ஏற்றுத் தமிழ்காப்போர் தொண்டோ
மலையினும் மாணப் பெரிது.

கன்னல் தமிழாண்டோ கட்டாயம் முன்னொளிர
பின்னர் அடைப்பில் பிறயாண்டு - மின்ன
நிலையான நற்பழக்கம் நீண்டிடச் செய்தல்
மலையினும் மாணப் பெரிது.

தமிழில் படித்தோர்க்கே தக்கபணி நல்கும்
அமிழ்தமாய் வந்தோர் ஆணை - தமிழா!
நிலையில் உயர நிறைதமிழில் கற்றல்
மலையினும் மாணப் பெரிது.


-திருக்குறள் நாவை.சிவம்
90034 69133


கருத்துப்படம்
குண்டு குழிச் சாலைகள்
என்னப்பா இது! புது வேடமா இருக்கு ?...
வருவது மழைக்காலம்! சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளன. சேறு, சகதிகளைத் தாண்டிச் சமாளிக்க இந்தப் பயிற்சி!



சென்ற இதழ் தொடர்ச்சி:

# அறிவுச் சுரங்கம் அப்பாத்துரையார்



- முகம் மாமணி

31

## பெரியார் எனக்குக் கடவுள் போல!

'மாமணி....! நான் சொல்லி வருவது ரொம்பவும் போர் அடிக்கிறதா?' என்றார் அப்பா.

நான் சிரித்தேன்.

'என்ன, சிரிக்கிறீர்கள்? சொல்லுங்கள்...'

'அய்யா, உங்கள் நெஞ்சில் பொங்கிவரும் எண்ணங்களையெல்லாம் வெளியே கொட்டி விடுங்கள். அதிலிருந்து தள்ள வேண்டியதைத் தள்ளி, கொள்ள வேண்டியதைக் கொள்வேன். அதாவது, ஒரு பலாப்பழத்தின் முள் அங்கியான மேல் தோலையும் உள்ளே உள்ள சத்தற்ற சடைகளையும் நீக்கிவிட்டு, பலாச் சுளையை - அதிலிருக்கும் கொட்டையையும் எடுத்துவிட்டு, குழந்தை முதல் பெரியவர் வரை அப்படியே வாயில் போட்டுக் கொள்ளக்கூடிய சுளைகளைப்போல் உங்கள் வரலாற்றை 'முகம்' வாசகர்களுக்கு நான் தரப் போகிறேன்.'

நான் சொல்லியதைக் கேட்டு, பார்வையிழந்த அப்பாவின் கண் இமைகள் படபடவென்று துடிக்கின்றன. மெல்ல சிரிக்கிறார். பிறகு, 'என் போக்குக்கே விட்டுவிட்டால், என் வரலாறு இந்த யுகத்தில் முடியாது! உங்கள் போக்குக்கு என்னை இழுத்துக் கொள்ளுங்கள்...'

சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு, 'அய்யா! புத்தருக்குப் பிறகு பெரியாரைத்தான் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக நான் பார்க்கிறேன். அவருடைய வரலாற்றையும், கருத்துகளையும் சமீபத்தில் தான் நான் சில ஆங்கில நூல்கள் மூலம் படித்தேன். இவ்வளவு நாள் அவரை நான் அறியாமல் இருந்துவிட்டேனே என்று நான் வருந்துகிறேன்' என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் நிருபராக, எழுத்தாளராக, ஆசிரியராக இருந்த அருண்சோரி என்பவரின் நேர்காணல் ஆனந்த விகடன் இதழில் சில காலத்துக்கு முன் வந்தது. ஆகவே, பெரியாரோடு நீங்கள் பழகிய சுவையான

செய்திகளைச் சொல்லுங்களேன்' என்றேன்.

'ஆங்.... அருமையான யோசனை! பெரியார் எனக்குக் கடவுள் போல! மாமணி... நீங்கள் பெரியாரைப் பார்த்திருக்கிறீர்களா?' - அப்பா.

ஒரு கணம் என் சிந்தனை பின்னோக்கி ஓடியது. பிறகு, 'பெரியாரை முதன் முதலாகப் பார்த்ததும், அவர் பேச்சைக் கேட்டதும் 1947 ஆகஸ்டு 12-ஆம் நாள், சென்னை இராயபுரம் காவல் நிலையத்திற்குப் பின்புறமுள்ள சாலையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்தான்.

1947 ஆகஸ்டு 15 திராவிட ருக்குச் சுதந்திர நாள் அல்ல. துக்கநாள்! என்று பெரியார் தமிழகமெங்கும் கூட்டங்களில் பேசிவந்த சமயம். அந்தத் தொடரின் கடைசிக் கூட்டம்தான் இராயபுரத்தில் நடைபெற்றது.

அப்போது எனக்குச் சுமார் பதினேழு வயதிருக்கும். நான் மூன்றாம் வகுப்புவரை மட்டுமே படித்துவிட்டு ஒரு தொழிலாளியாக வேலை செய்து வந்தேன். எனக்குத் தமிழறிவு என்பது எழுத்துக் கூட்டித்தான் படிக்கத் தெரியும்.

அந்தக் கூட்டத்தில் பேசிய பெரியாரின் கொச்சைத் தமிழ் வாதம், நூற்றுக்கு நூறு அப்படியே பசுமரத்தாணி போல் என்னுள் பதிந்து விட்டது. அதன் பிறகு சுமார் 20-25 கூட்டங்களில் அவருடைய பேச்சைக் கேட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, பெரியார் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய விடுதலை ஏட்டில் குத்தூசி குருசாமி ஆசிரியராக இருந்தபோது, ஆறு மாத காலம் அச்சுக் கோப்பாளனாக வேலை செய்திருக்கிறேன்.

பெரியார் சென்னையில் இருக்கும் போது, நாள்தோறும் அச்சகத்துக்கு வருவார்; கட்டுரைகள் எழுதித் தருவார். சில கட்டுரைகளை நான் அச்சுக் கோத்திருக்கிறேன். அவர் மற்றவர்களோடு பழகுவதை யும் பார்த்திருக்கிறேன்' என்றேன்.

'அடேயப்பா...!' என்று அப்பா உணர்ச்சிவயப் பட்டவராய் என் கைகளைப் பற்றிக் கொண்டு பூரிப்போடு, 'சரி, அடுத்த வாரம் முதல், நான் கண்ட பெரியாரைச் சொல்கிறேன், எழுதுங்கள்' என்றார்.

நான் புறப்பட விடை கோரி எழுந்ததும், இருங்கள், ஒரு கடமையை மறந்து விட்டீர்களே! தேநீர் வந்ததும் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்றார்.



தொடரும்....